குழந்தைகள் மருத்துவமனை

*3106—திரு. வி. பி. இராசன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராசபாளையத்தில் குழந்தைகள் மருத்துவமனை ஏற் படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

இல்லை.

நோயாளிகளுக்கான இதய வால்வுகள்

* 9024—டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பொது மருத்துவமனையில் இதய வால்வுகள் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடும் நோயாளிகளுக்கு மருத்துவமனையில் 'வால்வு' இல்லாத காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வால்வுகளும் தேவையான உபகரணங்களும் தொடர்ந்து கிடைக்கத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர் க. காஞ்சனா : தலைவர் அவர்களே, இதயத்திலே உள்ள பழுதுபட்ட ஈறுகள், வால்வுகளை அகற்றிவிட்டு செயற்கை ஈறுகள், வால்வுகளைப் பொருத்துகின்றபோது கடந்த 20 ஆண்டு களாக குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு பொருத்திக்கொண்ட நோயாளிகளுக்கு எந்த உடல் .கோளாறும் ஏற்படாது என்ற